DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலசுப்ரமணியன் | Caste | : | |
| Father Name | : | பிச்சைபிள்ளை | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **12.12.2025.**

**PW - 13**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுக்கா, எரகுடி தெற்கு வெள்ளாளர் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். முன்பு எரகுடி பஞ்சாயத்து தலைவராக பதவி வகித்தேன். ஆஜர்1 முதல் 6 எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சிகள் அசா.1 பாலமுருகன், அசா.5 சுப்ரமணியன் ஆகியோரை தெரியும். உள்ளூர்தான். இறந்துபோன கார்த்திக்கை தெரியும். சுமார் 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முன்பு காலை 09.30 அல்லது 10.00 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தேன். அப்போது சிதம்பரம் என்பவரின் குடும்பத்தார் அழுதுகொண்டு என்னிடம் வந்து சுப்ரமணியன் மகன் கார்த்திக் காரை சிதம்பரம் மீது மோதிவிட்டதாகவும்,

சிதம்பரத்தை மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும், அது தொடர்பாக பேசி தீர்க்கும்படி சொன்னார்கள். முதலில் அவர்கள் புகார் கொடுக்க வேண்டுமென்றார்கள். பிறகு அசா5 சுப்ரமணியன் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு ஆள் அனுப்பி வரசொன்னேன். அவர்கள் வந்ததும் விபத்து பற்றி கேட்டேன். அவர்கள் என்னிடம் வந்து என்னை பேசி தீர்த்துவிடும்படியும் புகார் கொடுக்க வேண்டாமென்றும் சொன்னார்கள். சுப்ரமணியன் குடும்பத்தார் மற்றும் அவரது ஜாதியை சேர்ந்த சங்கர் ஆகியோர் என்னிடம் சிதம்பரத்தின் மருத்துவ செலவிற்கான பணத்தை கொடுப்பதாக சொன்னார்கள். எவ்வளவு கொடுப்பீர்கள் என்று கேட்டேன், ஆகிற செலவை கொடுப்பதாக சொன்னார்கள். முதலில் ரூ.20000/- தருவதாக சொன்னார்கள். சிதம்பரத்தை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். ரூ.8000/- மட்டும் கொடுத்தார்கள். மீதியை பிறகு தருவதாக சொன்னார்கள். சொல்லிமுடித்துவிட்டு இருதரப்பும் சந்தோஷமாகதான் எனது இடத்தை விட்டுபோனார்கள். மதிய நேரத்தில் நான் கும்பாபிஷேகம் நடந்த கோவிலுக்கு போய் கொண்டிருந்தேன். காரில் வந்த பையன் இறந்துவிட்டதாகவும், அவர்களுக்குள் ஏதோ பிரச்சனை என்றும் அங்கிருந்த மக்கள் பேசிக்கொண்டார்கள். கார்த்திக்கிற்கு அடிபட்ட விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். .

*(சாட்சியை அரசு தரப்பில் பகுதியாக பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்களை பரிசீலித்து அனுமதி வழங்கப்பட்டது)*

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது 25.05.2019 அன்று காலை 08.30 மணியளவில் அப்போது எரகுடி உப்பிலியர் தெருவை சேர்ந்த கார்த்திக் என்பவர் தனது நண்பரின் காரை வாங்கி ஓட்டி பார்த்தார் என்றும், அப்போது எனது கடைக்கு அருகே எரகுடி விஏஓ அலுவலகம் அருகே துறையூர் செல்லும்

ரோட்டில் மேற்படி கார்த்திக் காரை ஓட்டி வந்த முன்னால் சென்ற சிதம்பரம் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி சென்றார் என்றும், அதனால் சிதம்பரத்தின் உறவினர்களான கிருஷ்ணமூர்த்தியும், கிருஷ்ணனும் இருசக்கர வாகனத்தில் கார்த்திக்கை துரத்தி சென்று காரோடு பிடித்து விஏஓ அலுவலகம் அருகே கொண்டு வந்தார்கள் என்றும், அதன்பிறகு ஆஜர் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து மேற்படி கார்த்திக்கை விபத்து ஏற்படுத்திவிட்டு எப்படி நிற்காமல் செல்லலாம் என்று சரமாரியாக அடித்து தாக்கினார்கள் என்றும், அப்போது கார்த்திக்கின் அண்ணன் மற்றும் அவரது பெற்றோர் எதிரிகளிடம் கார்த்திக்கை விட்டுவிடுமாறு கெஞ்சிக் கொண்டிருந்தார்கள் என்றும் அதை நான் கேள்விபட்டேன் என்றும் அதன்பிறகுதான் நான் சொன்ன பஞ்சாயத்து நடந்தது என்றும் சொன்னால் சரியல்ல. பின்னர் கார்த்திக் அன்று மதியம் எரகுடி வீரப்பன் வாழைத்தோட்டத்தில் சமாதி அருகே இறந்துகிடப்பதாக கேள்விபட்டேன் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.